# மேல் மாகாண மாகாண சபை - சபைக் கூட்டம்

**2018 ஆகஸ்ட் மாதம் 21 ஆந் திகதி மு.ப. 09.30 க்கு**

## நிகழ்ச்சி நிரல்

**I.** **தவிசாளரின் அறிவிப்புக்கள்**

**II.** **வருகை தராமல் இருக்க அங்கீகாரம் பெறும் யோசனை**

**III.** **அறிக்கைகளையும், ஆவணங்களையும், சமர்ப்பித்தல்**

**IV.** **செயற்குழுக்களின் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்**

**V.** **மனுக்கள்**

**VI.** **கேள்விகள் / இடைக்கால கேள்விகள்**

**01.** **கௌரவ மஹிந்த ஜயசிங்ஹ உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் , சட்டம் ,ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு, மற்றும் சுற்றுலாத்துறை தொடர்பான அமைச்சரிடம் 2018.08.07 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி:** **(Ïæ/vi (1)18/38)**

அ. வத்தளை பிரதேச செயலாளர் பிரிவில் வத்தளை பிரதேச சபையின் மூலம் நிதியினை செலவு செய்து ஹொரபே தொடக்கம் ஹீன்கெந்த வரை காணப்படும் வீதியின் முதலாவது பாலத்தை புதிதாக நிர்மாணிப்பதற்காக எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டது என்பதனை நீங்கள் இச் சபைக்கு அறிவிப்பீர்களா ?

ஆ. அப் பாலத்தின் திட்டத்திற்கு இணங்க பக்கச் சுவரின் நீளம் எவ்வளவு என்பதனையும் சபைக்கு அறிவிப்பீர்களா ?

இ. இவ் வேளையில் அச் செயற்றிட்டம் நிறைவு செய்யப்பட்டு ஒரு வருடம் நிறைவடையும் முன்னர் பாலம் மற்றும் இரு பகுதியிலும் கோடு விழுந்துள்ளது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

ஈ. இவ் வேளையில் பாலத்தின் இரு பகுதியிலும் குழிகள் ஏற்பட்டுள்ள படியால் அதனூடாக பயணம் செய்யும் போது கஷ்டமான நிலை ஏற்பட்டுள்ளது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

உ. இச் செயற்றிட்டத்தினை சிறப்பாக பூர்த்தி செய்யாமை தொடர்பாக உரியவர்களுக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கை யாது ?

ஊ. இல்லையாயின் ஏன் ?

**02.** **கௌரவ மஹிந்த ஜயசிங்ஹ உறுப்பினரினால் கௌரவ வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வியாபாரம், வீடமைப்பு நிர்மாணம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சரிடம் 2018.08.07 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி :** **(Ïæ/vi (1)18/39)**

அ. ஜா-எல பிரதேச செயலாளர் பிரிவின் ராகம தேவத்தை குருச சந்தியிலிருந்து வல்பொல திசையில் செல்லும் வீதியின் ஆரம்பப் பகுதியில் ஒழுங்கற்ற கான் தொகுதி ஒன்று கட்டப்பட்டுள்ளது என்பதனை நீங்கள் ஏற்றுக் கொள்கின்றீர்களா ?

ஆ. அப் பகுதியானது சிறிய மழையிலும் கூட நிரம்பி வழிவதன் காரணமாக அருகில் உள்ள பிரதேச வாசிகள் மிகவும் கஷ்டத்துக்கு உற்படுகின்றனர் என்பதனை நீங்கள் ஏற்றுக் கொள்கின்றீர்களா ?

இ. முறையற்ற ரீதியில் அவ் வீதியில் கானினை அமைத்தது தொடர்பாக விசாரணை ஒன்றினை மேற்கொள்கின்றீர்களா ?

ஈ. ஏதாவது முறைகேடொன்று நிகழ்ந்திருந்தால் உரியவர்களுக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கை யாது என்பதை நீங்கள் சபைக்கு அறிவிப்பீர்களா ?

உ. அருகில் உள்ள பிரதேச மக்களை கஷ்டத்துக்கு உட்படுத்தியுள்ள அக் கான் தொகுதியை உரிய முறையில் கட்ட நீங்கள் எடுக்கும் நடவடிக்கை யாது என்பதை இச் சபைக்கு அறிவிப்பீர்களா ?

ஊ. இல்லையாயின் ஏன் ?

**03.** **கௌரவ மஹிந்த ஜயசிங்ஹ உறுப்பினரினால் கௌரவ கல்வி, கலை கலாச்சார நடவடிக்கை, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம், தகவல் தொழினுட்பம் தொடர்பான அமைச்சரிடம்** 2018.08.07 **ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி : (Îæ/vi (1)18/41)**

அ. மேல் மாகாண சபையினால் சுற்றறிக்கைக்கு இணங்க ஆசிரியர்களின் சம்பளம் மற்றும் பதவிகளைப் பெற்றுக் கொடுப்பது ஆரம்பிக்கப்பட்டுள்ளதா என்பதனை சபைக்கு அறிவிப்பீர்களா ?

ஆ. சுற்றறிக்கை வெளியிடப்பட்டு பல வருடங்கள் சென்றுள்ள போதும் இன்னும் ஆசிரியர்களின் பதவியுயர்வு மற்றும் நிலுவை சம்பளத்தை வழங்குவது எதனால் தாமதமாகின்றது என்பதனை நீங்கள் சபைக்கு அறிவிப்பீர்களா ?

இ. ஆசிரியர்களின் தரங்களை உயர்த்தியதாக குறிப்பிட்ட போதும் அதில் குறிப்பிடப்பட்ட படி சம்பளமும் நிலுவை நிதியும் எதன் காரணமாக கிடைக்காமல் போகின்றது ?

ஈ. ஆசிரிய சம்பளத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதியை மேல் மாகாண சபை வேறு செயற்றிட்டங்களுக்காக பயன்படுத்த உள்ளதா என்பதனை சபைக்கு அறிவிப்பீர்களா ?

உ. பதவி உயர்வினை வழங்கி சம்பளத்தை தயாரித்த பின்னர் இது வரை ஆசிரியர்கள் பெற்ற சம்பளம் கிடைக்கப் பெறாமைக்குரிய காரணம் யாது என்பதை நீங்கள் சபைக்கு அறிவிப்பீர்களா ?

ஊ. இப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக நீங்கள் எடுக்கும் நடவடிக்கை யாது என்பதனை சபைக்கு அறிவிப்பீர்களா ?

எ. இல்லையாயின் ஏன் ?

**04.** **கௌரவ ரோஸ் பிரணாந்து உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் , சட்டம் ,ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு, மற்றும் சுற்றுலாத்துறை தொடர்பான அமைச்சரிடம்** 2018.08.07 **ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி: (Îæ/vi (1)18/42)**

அ. கட்டான பிரதேச செயலாளர் பிரிவின் கிந்திகொட கிராமத்தின் ஹேக்கந்த கால்வாய் உட்படுமாறு கொங்ரீட் தூணினைப் பயன்படுத்தி கட்டடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

ஆ. இவ் இடத்தில் இரவில் நாளாந்தம் இளைஞர் யுவதிகள் சங்கீத கச்சேரிகளை நடாத்தி போதைப் பொருள் பாவனைக்கு இளைஞர் யுவதிகளை ஈடுபடுத்துவதனால் கிராமவாசிகளுக்கு இடையே பிரச்சினை ஒன்று ஏற்பட்டுள்ளது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

இ. இக் கட்டடம் கட்டுனாயக்க சீதுவ நகர சபையின் அல்லது பிற பொறுப்புச் சொல்ல வேண்டிய தாபனத்தின் அனுமதியினைப் பெற்றா நிர்மாணிக்கப்பட்டுள்ளது ?

ஈ. அவ்வாறு சட்டரீதியான அங்கீகாரமின்றி இப் பொதுக் கால்வாய் உட்படுமாறு இக் கட்டடம் நிர்மாணிக்கப்பட்டிருந்தால், அதனை அகற்றுவதற்கு நீங்கள் நடவடிக்கை எடுப்பீர்களா ?

உ. இல்லையாயின் ஏன் ?

**05.** **கௌரவ ரோஸ் பிரணாந்து உறுப்பினரினால் கௌரவ வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வியாபாரம், வீடமைப்பு நிர்மாணம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சரிடம்** 2018.08.07 **ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி: (Îæ/vi (1)18/43)**

அ. கட்டான பிரதேச செயலாளர் பிரிவில் இலக்கம் 67 உடங்கால வன்ச கிராம உத்தியோகத்தர் பிரிவில் கிராம அபிவிருத்தி சங்கத்தின் கடந்த ஐந்து வருட காலத்தினுள் (2012 தொடக்கம் 2017 வரை) மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டங்களுக்கு உரியதாக 5% ஐ கணக்கிட்டு பெற்றுக் கொண்ட நிதியை ஒவ்வொரு வருடங்களுக்குமாக வெவ்வேறாக முன்வைப்பீர்களா ?

ஆ. இக் கிராம உத்தியோகத்தர் பிரிவில் மேற்கூறப்பட்ட கிராம அபிவிருத்தி சங்கத்தின் 2017 ஆம் ஆண்டு வரைக்குமான வரவு செலவுத் திட்டத்தை இச் சபைக்கு முன்வைப்பீர்களா ?

இ. அக் கிராம அபிவிருத்தி சங்கத்திற்காக காணி ஒன்றை கொள்வனவு செய்வதற்காக ரூபா ஐந்து இலட்சம் (500,000/-) நிதி ஒன்று சேகரிக்கப்பட்டிருந்ததா ?

ஈ. அக் காணியினை கொள்வனவு செய்வது இப்போது இடம்பெற்றுள்ளதா ?

உ. அந்த நிதியை யார் பிடித்துவைத்துள்ளனர் ?

ஊ. அக் கிராம அபிவிருத்திச் சங்கம் 2018 ஆம் ஆண்டில் மேற்கொண்ட செயற்திட்டங்களுக்காக இதுவரை சேகரித்த 5% நிதி எவ்வளவு ?

- சபை ஒத்திவைக்கும் வேளையில் கேட்கப்பட்ட கேள்வி

**06.** **கௌரவ லக்ஷ்மன் நிபுணாரச்சி உறுப்பினரினால் கௌரவ சுகாதார, உள்நாட்டு வைத்திய, சமூக நலன்புரி, நன்நடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவை, மகளிர் விவகாரம் அத்துடன் சபை நடவடிக்கை தொடர்பான அமைச்சரிடம் 2018.08.07 ஆந் திகதி சபை ஒத்திவைக்கும் வேளையில் கேட்கப்பட்ட கேள்வி :** **(Îæ/vi (1)18/ADG - 03)**

அ. மாகாண சபை ஆயுர்வேத வைத்தியசாலைகளில் விடயப் பொறுப்பு வைத்திய உத்தியோகத்தர்கள், வைத்திய அதிகாரிகள் மற்றும் வைத்திய பணிப்பாளர் பதவிகளுக்காக ஆட்சேர்த்துக் கொள்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளனவா ?

ஆ. இப் பதவிகளுக்காக மேல் மாகாணத்தின் ஆயுர்வேத வைத்தியசாலைகளில் கடமையாற்றும் வைத்திய உத்தியோகத்தர்களுக்கு மாத்திரமே விண்ணப்பத்தை முன்வைக்க இடமுண்டு என்பதனை ஏற்றுக் கொள்கின்றீர்களா ?

இ. மேல் மாகாணத்தின் உள்ளூராட்சித் தாபனங்களில் கடமையாற்றும் வைத்திய உத்தியோகத்தர்கள் அப் பதவிகளுக்காக விண்ணப்பிக்க முடியாதுள்ளது என்பதனை ஏற்றுக்கொள்கின்றீர்களா ?

ஈ. இதற்கிணங்க மேல் மாகாணத்தின் உள்ளூராட்சித் தாபனங்களின் பதவிகளுக்கு உரிய வைத்திய உத்தியோகத்தர்களுக்கு அநீதி ஒன்று ஏற்படுகின்றது என்பதனை ஏற்றுக் கொள்கின்றீர்களா ?

உ. இந் நிலைமையினை திருத்த தேவையான நடவடிக்கை எடுப்பீர்களா ?

ஊ. இல்லையாயின் ஏன் ?

**07.** **கௌரவ சிறிகமல் பிலீஷியன் த சில்வா உறுப்பினரினால் கௌரவ கல்வி, கலை கலாச்சார நடவடிக்கை, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம், தகவல் தொழினுட்பம் தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு :** **(Îæ/vi (1)18/44)**

அ. 2006 தொடக்கம் 2014 வரை மேல் மாகாண சபைக்கு உரிய எத்தனை மாகாண பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன ?

ஆ. அவற்றை மாவட்ட மற்றும் வலய ரீதியில் முன்வைப்பீர்களா ?

இ. அப்படியாயின் அவை யாவை ?

ஈ. 2015 தொடக்கம் இது வரை (2018) இம் மாகாண சபைக்குரிய பாடசாலைகள் மூடப்பட்டுள்ளனவா ? அப்படியாயின் அவை யாவை ?

உ. இப் பாடசாலைகள் மூடப்படுவதற்கு ஏற்பட்ட விஷேட காரணங்களை தெளிவுபடுத்துவீர்களா ? அப்படியாயின் என்ன காரணம் ?

ஊ. எதிர்காலத்தில் இம் மாகாணத்தினுள் மூடப்படும் நிலைக்கு உட்பட்டுள்ள பாடசாலைகள் காணப்படுகின்றனவா ? அவ்வாறு காணப்பட்டால் அவை தொடர்பாக எடுக்கக் கூடிய நடவடிக்கையினை தெளிவுபடுத்த முடியுமா ? அவை யாவை ?

**08.** **கௌரவ சுனில் வடகல உறுப்பினரினால் கௌரவ வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வியாபாரம், வீடமைப்பு நிர்மாணம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சரிடம் கேட்பதற்கு :** **(Îæ/vi (1)18/45)**

அ. i. ம/ப கிழக்கு ஹேவாகம கோரலயே (ஹங்வெல்ல) பொதுச் சேவை கூட்டுறவுச் சங்கத்தின் நிதி ரூபா. 59 கோடியானது தனியார் நிதித் தாபனம் ஒன்றில் முதலீடு செய்யப்பட்டுள்ளது என்பதனை நீங்கள் அறிவீர்களா ? இல்லையாயின் ஏன் ?

ii. குறிப்பிட்ட நிதிக்குரிய வட்டி மற்றும் ஆரம்ப நிதியினை மீண்டும் பெற்றுக் கொள்வதில் ஏதாவது பிரச்சினை ஒன்று தோன்றியுள்ளதா ?

iii. இந் நிதியினை முதலீடு செய்ய கூட்டுறவு அபிவிருத்தி பதிவாளரின் எழுத்து மூலமான முன் அனுமதி ஒன்று பெறப்பட்டுள்ளதா ?

iv. அவ்வாறான எழுத்து மூலமான முன் அனுமதி ஒன்றினைப் பெற்றுக் கொள்ளவில்லையாயின் அது தொடர்பாக நீங்கள் எடுக்கும் நடவடிக்கை யாது ?

ஆ. i. இப்பொதுச் சேவை கூட்டுறவுச் சங்கத்தின் (ஹங்வெல்ல) யின் நிதி 2012.05.14 ஆந் திகதி தொடக்கம் பயன்படுத்தப்பட்டுள்ள முறை தொடர்பாக முறையாக ஆராய்ந்து பார்க்கும் நடவடிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதா ?

ii. இந் நிதியினை முதலீடு செய்தது தொடர்பாக வருடாந்த கணக்காய்வின் போது விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளனவா ?

iii. அவ்வாறே நிதி ஒழுங்குபடுத்தும் மாதாந்த முன்னேற்ற மீளாய்வுக் குழுவில் அல்லது F28 மாதாந்த வழிகாட்டல் அறிக்கை மீளாய்வுக் குழுவில் இது தொடர்பாக விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளனவா ?

**09.** **கௌரவ சுனில் வடகல உறுப்பினரினால் கௌரவ வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வியாபாரம், வீடமைப்பு நிர்மாணம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சரிடம் கேட்பதற்கு :** **(Ïæ/vi (1)18/46)**

அ. மேல் மாகாணத்தின் கூட்டுறவு நியதிச் சட்டத்தின் 41 ஆவது பிரிவிற்கு முரணாக ம/ப கிழக்கு ஹேவாகம கோரலயே பொதுச் சேவைக் கூட்டுறவுச் சங்கத்தின் உத்தியோகத்தர்கள் செயற்பட்டுள்ளனர் என்பதனை நீங்கள் ஏற்றுக் கொள்கின்றீர்களா ?

ஆ. அப்படியாயின் அவர்கள் தொடர்பாக எடுக்கப்படும் எதிர்கால நடவடிக்கை யாது ?

இ. குறித்த சங்கத்தின் பிரதேச செயற்குழுத் தேர்தல் இறுதியாக எப்போது நடாத்தப்பட்டது ?

ஈ. அதற்கிணங்க இத் தேர்தலை நடாத்துவது பல வருடங்கள் தாமதமாகி உள்ளது என்பதனை நீங்கள் ஏற்றுக்கொள்கின்றீர்களா ?

உ. அவ்வாறு தாமதப்படுத்தப்பட்டுள்ள போதும் கூட்டுறவுச் சங்க நியதிச் சட்டத்தின் 60 ஆவது பிரிவின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

**10.** **கௌரவ நந்தன பத்மகுமார உறுப்பினரினால் கௌரவ விவசாய, காணி, நீர்ப்பாசனம், கடற்றொழில், விலங்குற்பத்தி சுகாதாராம் அத்துடன் கமநல அபிவிருத்தி தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு :** **(Ïæ/vi (1)18/47)**

அ. i. களுத்துறை மாவட்டத்தில் அழகிய மீன் வளர்ப்பாளர்கள் சங்கங்கள் எத்தனை காணப்படுகின்றன ?
ii. சங்கங்களின் பெயர் யாவை ?
iii. அச் சங்கங்கள் கடற்றொழில் அமைச்சில் பதிவு செய்யப்பட்டுள்ளனவா ?

ஆ. i. மேல் மாகாணத்தின் கடற்றொழில் அமைச்சின் மூலம் 2017 ஆம் ஆண்டில் களுத்துறை மாவட்டத்தின் அழகிய வளர்ப்பு மீன் உற்பத்திக்காக உதவி வழங்கப்பட்டுள்ளனவா ?
ii. அது எவ்வளவு ?
iii. அவ் உதவிகளை வழங்கும் போது கடைபிடிக்கப்பட்டுள்ள வரையறைகள் யாவை ?
iv. இவ் உதவிகள் சங்கங்களுக்காகவா வழங்கப்பட்டுள்ளன ?
v. அப்படியாயின் அச் சங்கங்களின் பெயர் மற்றும் உதவியின் அளவு எவ்வளவு ?

**11.** **கௌரவ நந்தன பத்மகுமார உறுப்பினரினால் கௌரவ கல்வி, கலை கலாச்சார நடவடிக்கை, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம், தகவல் தொழினுட்பம் தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு :** **(Ïæ/vi (1)18/48)**

அ. i. களுத்துறை மாவட்டத்தில் 100 பிள்ளைகளை விட குறைந்த பிள்ளைகள் காணப்படும் பாடசாலைகள் உள்ளனவா ?

ii. அதன் எண்ணிக்கை எவ்வளவு ?

ஆ. i. அது கல்வி வலய மட்டத்தில் எவ்வளவு ?

ii. அப் பாடசாலைகளின் பெயர் மற்றும் பிள்ளைகளின் எண்ணிக்கையை வெவ்வேறாக முன்வைக்க இயலுமா ?

iii. இப் பாடசாலைப் பிள்ளைகளின் எண்ணிக்கை குறைந்தமை தொடர்பாக உங்கள் அமைச்சினால் ஆராய்ந்து பார்க்கும் நடவடிக்கை ஒன்று மேற்கொள்ளப்படுள்ளதா ?

iv. அது தொடர்பாக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாது ?

## VII. தனிப்பட்ட தெளிவுபடுத்தல்கள்

## VIII. சிறப்புரிமை மீறப்பட்டது தொடர்பான தகவல்கள்

## IX. அமைச்சுக்களின் அறிவிப்புக்களும்/அமைச்சர்களின் தகவல்களும் / சிறப்புரிமை மீறப்பட்டது தொடர்பான பதில்கள்

## X. தனிப்பட்ட உறுப்பினர்களின் நடவடிக்கைகள்

**01.** **கௌரவ சுனில் வடகல அவர்கள்**

புளூமென்டல் குப்பை மேடு, மீதொடுமுல்லை குப்பை மேடு, கரதியான குப்பை மேடு போன்ற குப்பை மேடுகள் கவிழ்ந்ததன் காரணமாக மனித உயிர்கள் மற்றும் முழு சுற்றாடலும் அழிவுக்கு உட்பட்ட வேளையில் அதற்கு பொறுப்புச் சொல்ல வேண்டிய அலுவலகர்கள், தாபனங்கள் அவற்றை தடுப்பதற்கு நிரந்தர தீர்வினை வழங்குவதாகக் குறிப்பிட்டு பல்வேறுபட்ட பிரசாரங்களை மேற்கொண்டனர். மீதொடுமுல்லை குப்பமேடு, புளூமென்டல் குப்பை மேடு ஆகியவற்றை நகர பூங்காக்களாக மாற்றுவதாக அறிவிக்கப்பட்டது. தற்போது அந்த குப்பை மேடுகள் அவ்வாறே காணப்படுகின்றன. நீண்ட கால வேலைத் திட்டம் ஒன்று இல்லை. களனி கங்கை ஆண்டு முழுவதும் பெருக்கெடுக்கும் போது அதில் மூழ்கும் மக்களுக்கு அச் சந்தர்ப்பத்தில் உணவுப் பொதி, உலர் உணவுப் பொருட்களை வழங்கி தற்காலிக நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், இவ் எல்லா விபத்துக்களுக்கும் அந்தந்த விடயங்களுக்குரிய அமைச்சு தலையிட்டு நீண்ட கால தீர்வொன்றினை முன்வைக்க வேண்டும் என இம் மேல் மாகாண மாகாண சபை பிரேரணை தெரிவிக்கின்றது. **(பி/vi(1)18/04)**

**02.** **கௌரவ உபாலி கொடிகார அவர்கள்**

மேல் மாகாணத்தின் கல்வி வலய மட்டத்தில் அமைந்துள்ள விஷேடதேவையுள்ள பிள்ளைகள் கல்வி கற்கும் பாடசாலைகளின் எண்ணிக்கை 182 ஆகுவதுடன், அப் பாடசாலைகளில் கல்வி கற்கும் விஷேட தேவைகள் உள்ள பிள்ளைகளின் எண்ணிக்கை 3713 ஆகும்.

அரச பாடசாலைகளில் கல்வி கற்கும் சாதாரண பிள்ளைகளுக்கு ஐந்தாம் தர புலமை பரிசில் பரீட்சையின் பெறுபேற்றின் கீழ் புலமைப் பரிசில் உதவி நிதி ஒன்று, பல்கலைக்கழக மாணவர்களுக்கு மஹபொல புலமைப்பரிசில் மூலம் புலமைப் பரிசில் நிதி ஒன்று வழங்கும் முறை ஒன்று காணப்பட்ட போதும் விஷேட தேவையுள்ள பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில் உதவி ஒன்றினை பெற்றுக் கொடுக்கும் முறை ஒன்று இல்லை.

மேல் மாகாணத்தின் விஷேட தேவையுள்ள பிள்ளைகளுக்காக, கல்வியினை பெற்றுக் கொடுக்கும் பாடசாலைகளில் கல்வி கற்கும் பிள்ளைகளை ஊக்கப்படுத்துவதற்காக அப் பிள்ளைகளுக்கு கல்வி நடவடிக்கைகளுக்காக ஏதாவது படி ஒன்று அல்லது உதவி நிதி ஒன்றினை வழங்க வேண்டும் என இம் மேல் மாகாண மாகாண சபை கருதுகின்றது. **(பி/vi(1)18/05)**

## XI. சபை ஒத்திவைப்பு

கே.எச்.டி.கே. சமரக்கோன்
செயலாளர்,
மேல் மாகாண மாகாண சபை

**2018.08.08** ஆந் திகதி
சபைச் செயலாளர் காரியாலயம் (மே.மா)
மேல் மாகாண மாகாண சபை,
5ஆம் மாடி, Bஅலகு,
செத்சிறிபாய,
பத்தரமுல்ல.